

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.1.2026) பிராட்வே, பிரகாசம் சாலை பாரதி மகளிர் கல்லூரியில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 19.58 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய கல்வி அரங்கம் அமைப்பதற்கான பணியினை அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, அ. வெற்றி அழகன், ஜோசப் சாமுவேல் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.1.2026) பிராட்வே, பிரகாசம் சாலை பாரதி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கல்லூரி மாணவர்களின் திறன் வளர்ச்சி மற்றும் டிஜிட்டல் முன்னேற்றத்திற்கான “உலகம் உங்கள் கையில்” திட்டத்தின் கீழ் மாணவிகளுக்கு மடிக்கணினிகளை வழங்கினார்.

## பாரதி மகளிர் கல்லூரியில் ரூ.19.58 கோடியில் கலையரங்கத்துக்கு அடிக்கல் நாட்டு விழா:

# மாணவிகளுக்கு திராவிட மாடல் அரசு துணைநிற்பது போல் நீங்களும் இந்த அரசுக்கு உறுதுணையாக இருங்கள்!

## சென்னை விழாவில் மடிக்கணினிகள் வழங்கி துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

**சென்னை, ஜன.10 –**

**சென்னை, பாரிமுனையில் உள்ள பாரதி மகளிர் கலை அறிவியல் கல்லூரியில், ரூ. 19.58 கோடி மதிப்பில் கட்டப்படவுள்ள கலையரங்கத்துக்கு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று முன்தினம் மாலை அடிக்கல் நாட்டினார்.**

**இதைத் தொடர்ந்து, கல்லூரி மாணவிகளுக்கு கழக அரசின் மடிக்கணினி வழங்கும் திட்டத்தின் கீழ், லேப்டாப்களை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கி, மாணவிகளை வாழ்த்திப் பேசினார்.**

**அப்போது அவர், “கல்லூரி மாணவிகளுடைய வளர்ச்சிக்குத் திராவிட மாடல் அரசு எந்த அளவுக்கு உறுதுணையாக இருக்கிறதோ, அதே-போல் நீங்களும் இந்த அரசுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும்” என்று குறிப்பிட்டார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய சிறப்புரையின் விவரம் வருமாறு:–**

``ஹேப்பி நியூ இயர் (Happy New Year)!” இந்த பாரதி கல்லூரிக்கு எப்போது வந்தாலும், உங்களைச் சந்திக்கும் பொழுது ஒரு புது உற்சாகமும் மகிழ்ச்சியும் தானாகவே வந்துவிடும். அந்த அளவுக்கு எப்பொழுதுமே ஆற்றலோடு இருக்கக்கூடியவர்கள்தான் இந்த பாரதி கல்லூரி மாணவிகளாகிய நீங்கள்.

### கலைஞர் நூற்றாண்டு விழா

இது ஒன்றும் இந்தக் கல்லூரிக்கு நான் வரும் முதல் முறை கிடையாது; பலமுறை வந்திருக்கிறேன். பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு உங்களையெல்லாம் பலமுறை சந்தித்திருக்கிறேன். இங்கே எதிரில் இருக்கக்கூடிய கலைஞர் நூற்றாண்டு விழா கட்டடத்தை 2024ஆம் ஆண்டு நான்தான் திறந்து வைத்தேன். அது எனக்குக் கூடுதல் சிறப்பு மற்றும் பெருமை. அதுமட்டுமல்ல, சரியாக ஒரு 12 நாட்களுக்கு முன்புதான் இந்தப் பகுதிக்கு வருகை தந்திருந்தேன். பிரகாசம் சாலையில் அமைய இருக்கக்கூடிய `முதல்வர் படைப்பகம்' மற்றும் நூலகக் கட்டடத்திற்கான பணிகளை நான்தான் தொடங்கி வைத்தேன். அந்த நிகழ்ச்சியில் பல்வேறு மாணவிகள், சகோதரிகள் என நிறைய பேர் உங்களின் அனுபவங்களைப் பேசினீர்கள். பேசும் பொழுது ஒரு வேண்டுகோள் வைத்திருந்தீர்கள், நன்றியும் சொன்னீர்கள். இந்தக் கட்டடம் கட்டியது எந்த வகையில் உங்களுக்குப் பயனாக இருக்கிறது என்று சொன்னீர்கள். அதே நேரத்தில் ஒரு கோரிக்கையும் வைத்தீர்கள். அதற்கு முன்னால், இந்தக் கலைஞர் நூற்றாண்டு கட்டடம் எந்த அளவுக்குப் பயனுள்ளதாக இருக்கிறது என்று பெருமையாகப் பேசினீர்கள். என்னைப் பொறுத்தவரைக்கும், மாணவிகள் நிறைய பேர் சிறப்பாகப் படிக்கிறார்கள் என்பதுதான் கலைஞர் நூற்றாண்டு கட்டடத்திற்கே மிகப்பெரிய பெருமை.

### அடிக்கல் நாட்டு விழா

அப்பொழுது ஒரு கோரிக்கை வைத்தீர்கள். உங்கள் கல்லூரிக்கு ஓர் அரங்கம் (Auditorium) வேண்டும் என்ற வேண்டுகோளை முன்வைத்தீர்கள். அதை நிச்சயமாக நீங்களும் மறந்திருக்க மாட்டீர்கள், நானும் மறக்கவில்லை.



அதனால்தான் உடனே நம்முடைய அமைச்சர் அண்ணன் சேகர்பாபு அவர்கள் அதை ஞாபகப்படுத்தி, அதை உடனடியாகச் செய்து கொடுக்க வேண்டும் என்று கூறினார். இன்று உங்கள் கல்லூரிக்கே வந்து, நீங்கள் கேட்ட அந்த அரங்கத்திற்கு அடிக்கல் நாட்டி, பணிகளைத் தொடங்கி இருக்கிறோம்.

அமைச்சரிடமும் அதிகாரிகளிடமும் கேட்டேன், இந்த அரங்கம் எவ்வளவு நாட்களில் ஆயத்தமாகும் என்று. ``குறைந்தது ஒரு நான்கு மாதங்களுக்குள் எப்படியாவது தயார் செய்து கொடுத்து விடுகிறோம்” என்று சொல்லியிருக்கிறார்கள். நிச்சயம் நான்கு மாதங்களில் உங்களுக்கான அந்த அரங்கம் இங்கே இருக்கும். அது உங்களுக்கு இன்னும் பல நிகழ்ச்சிகளை நடத்துவதற்குப் பயனுள்ளதாக அமையும்.

எப்பொழுதுமே பொங்கல் விழா என்றாலே தமிழ்நாடு முழுவதும் ஒரே கொண்டாட்டமாகவும் மகிழ்ச்சியாகவும்தான் இருக்கும். அதிலும் ஒரு கல்லூரி வளாகம் என்றால், அதைக் கேட்கவே தேவையில்லை. உங்களுக்கு இருக்கக்கூடிய அந்த மகிழ்ச்சியை இன்னும் அதிகமாக்கும் வகையில்தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள், இன்று உங்களுக்கு மடிக்கணினி (Laptop) வழங்குகின்ற நிகழ்ச்சியையும் சேர்த்து நடத்தி இருக்கிறார்.

### 10 லட்சம் மடிக்கணினிகள்

இன்று 20 மாணவிகளுக்கு மடிக்கணினி வழங்கியிருக்கிறோம். விரைவில் இறுதி ஆண்டு மாணவிகள் அத்தனை பேருக்கும் மடிக்கணினி வழங்கப்படும். இந்த வருடம் மட்டும் 10 லட்சம் மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினி வழங்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் முடிவெடுத்திருக்கிறார். அதற்கான பணிகளைத் தொடங்கிவிட்டோம்.

``பெண்களின் கைகளில் இருந்து கரண்டியைப் பிடுங்கிவிட்டுப் புத்தகத்தைக் கொடுக்க வேண்டும்” என்று தந்தை பெரியார் அவர்கள் சொன்னார். ஆனால், நம்முடைய தலைவர் அவர்கள் புத்தகத்தை மட்டும் அல்ல, கூடவே இன்று மடிக்கணினியையும் சேர்த்துக் கொடுத்திருக்கிறார். ஏனென்றால், பெண்களுக்குக் கல்வி எவ்வளவு முக்கியம் என்பதை உணர்ந்தவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்.

### கல்வி ஊக்கத்தொகை

ஒரு ஆண் படித்துவிட்டால், அது அவனுக்கு மட்டும்தான் பயனாக இருக்கும். ஆனால், ஒரு குடும்பத்தில் ஒரு பெண் படித்துவிட்டால் அந்தக் குடும்பமே படித்த மாதிரி; அது அந்தக் குடும்பத்திற்கே பயனாக இருக்கும். அப்படிப்பட்ட பெண்களின் கல்வியை ஊக்குவிப்பதற்குத்தான் நம்முடைய முதலமைச்சர் `புதுமைப் பெண்' திட்டத்தை அறிமுகப்படுத்தினார்கள். அரசுப் பள்ளியில் படித்துவிட்டு உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்குக் கல்வி ஊக்கத்தொகையாக மாதம் 1,000 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது.

### 4,000 மாணவிகள்

இந்த பாரதி கல்லூரியில் மட்டும் புதுமைப் பெண் திட்டத்தின் மூலமாக கடந்த நான்கு ஆண்டுகளில் 3,000 மாணவிகள் பயன்பெற்று இருக்கிறார்கள். இது மிகப்பெரிய ஒரு சாதனை. அதுமட்டுமல்ல, `நான் முதல்வன்' திட்டம் மூலமாக உங்களைப் போன்ற மாணவர்களுக்கு வேலைவாய்ப்பையும் நம்முடைய அரசு ஏற்படுத்தித் தருகிறது. இந்தக் கல்லூரியில் மட்டும் 4,000 மாணவிகள் `நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளீர்கள். குறிப்பாக, 1,400 மாணவிகளுக்கு வளாக நேர்காணலில் (Campus Interview) வேலை கிடைத்துப் பணியையும் உறுதி செய்திருக்கிறது நம்முடைய அரசு.

இப்பொழுது உங்களுடைய கல்விக்கு மேலும் உதவுவதற்காக மடிக்கணினி வழங்கப்படுகிறது. இந்தக் கல்லூரியில் மட்டும் மொத்தம் 1,180 மாணவிகளுக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட இருக்கின்றன. இன்று முதற்கட்டமாக 20 மாணவிகளுக்கு வழங்கியுள்ளோம். நிச்சயம் இந்த மடிக்கணினி உங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். பெரிய நிறுவனங்களில் உங்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதற்கும் இது உறுதுணையாக இருக்கும்.

மடிக்கணினியை நல்ல முறையில் பயன்படுத்துங்கள். நிறைய அறிவுரை கூறுகிறேனோ என்று நினைக்க வேண்டாம். இது பொழுதுபோக்கிற்காக மட்டுமல்ல, உங்களுடைய ஒவ்வொரு பொழுதையும் சிறப்பாக்க வேண்டும், எதிர்காலத்தை வலிமையாக்க வேண்டும் என்றுதான் நம்முடைய முதலமைச்சர் இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்திருக்கிறார். இதில் படம் பார்ப்பீர்கள், விளையாடுவீர்கள்; அதற்காக மட்டுமே இது கொடுக்கப்படவில்லை. இதைப் படிப்பிற்குப் பயனுள்ளதாகப் பயன்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு, மாணவிகளுக்குப் பல்வேறு திட்டங்களைத் தொடர்ந்து வழங்க இருக்கிறது. நீங்கள் வாழ்க்கையில் அடுத்த கட்டத்திற்குச் செல்ல வேண்டும், அதன் மூலமாக உங்கள் ஒட்டுமொத்த குடும்பமே முன்னேற வேண்டும் என்பதே முதலமைச்சரின் எண்ணம். அந்தப் பெருமையை பாரதி கல்லூரி மாணவிகள் நீங்கள் நிச்சயம் ஏற்படுத்தித் தருவீர்கள் என்ற நம்பிக்கை இந்த அரசுக்கும் முதலமைச்சர் அவர்களுக்கும் இருக்கிறது.

### திராவிட மாடல் அரசு

இப்பொழுது அடிக்கல் நாட்டப்பட்டுள்ள அரங்கத்திற்கான பணிகள் இன்னும் நான்கு மாதங்களில் நிறைவடையும். பணிகள் முடிந்ததும் நீங்கள் அழைத்தால், நிச்சயம் நானே வந்து அதைத் திறந்து வைக்கிறேன். உங்களுடைய வளர்ச்சிக்குத் திராவிட மாடல் அரசு எந்த அளவுக்கு உறுதுணையாக இருக்கிறதோ, அதேபோல் நீங்களும் இந்த அரசுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அனைவருக்கும் மீண்டும் எனது பொங்கல் நல்வாழ்த்துகளைக் கூறி விடை பெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்திப் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், வெற்றியழகன், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் காகர்லா உஷா ஐ.ஏ.எஸ்., உறுப்பினர் செயலாளர் பிரகாஷ் ஐ.ஏ.எஸ்., மாநகராட்சி ஆணையர் குமரகுருபரன் ஐ.ஏ.எஸ்., உயர்கல்வித் துறையின் அரசு செயலாளர் சங்கர் ஐ.ஏ.எஸ்., ஆணையர் சுந்தரவல்லி ஐ.ஏ.எஸ்., சி.எம்.டி.ஏ. முதன்மைச் செயல் அலுவலர் சிவஞானம் ஐ.ஏ.எஸ்., மாநகராட்சி வடக்கு வட்டாரத் துணை ஆணையர் கட்டா ரவி தேஜா ஐ.ஏ.எஸ்., மண்டலக் குழுத் தலைவர் ஸ்ரீராமலு, மாமன்ற உறுப்பினர்கள் வழக்கறிஞர் பரிமளம், நவீன், ராஜேஷ் ஜெயின், கல்லூரியின் முதல்வர் டாக்டர் கிளாடிஸ், இளைஞர் அணி அமைப்பாளர் வானவில் விஜய் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.



**“பெண்களின் கைகளில் இருந்து கரண்டியைப் பிடுங்கிவிட்டுப் புத்தகத்தைக் கொடுக்க வேண்டும்” என்று தந்தை பெரியார் அவர்கள் சொன்னார், ஆனால், நம்முடைய தலைவர் அவர்கள் புத்தகத்தை மட்டும் அல்ல, கூடவே இன்று மடிக்கணினியையும் சேர்த்துக் கொடுத்திருக்கிறார். ஏனென்றால், பெண்களுக்குக் கல்வி எவ்வளவு முக்கியம் என்பதை உணர்ந்தவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்.**